08.06.2026

சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண் - II, திருச்சிராப்பள்ளி
(மோட்டார் வாகன விபத்து நட்ட ஈடு கோரும் தீர்ப்பாயம்)

**எம்.சி.ஓ.பி. எண். 451/2025**
**ம.சா. - 1**

2026ம் ஆண்டு ஜீன் மாதம் 08ம் நாள் 1969 ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி உதவியாளர் திரு. எம். கனகலிங்கம் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணவேணி | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | | வட்டம் | |
| வயது | | கிராமம் | |

**முதல் விசாரணை (மனுதாரர் தரப்பில்) :**

நான் மனுதாரர்கள் தரப்பில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் அதை படித்து பார்த்து புரிந்து கொண்டு கையொப்பமிட்டுள்ளேன். அதை ஏற்றுக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

1. முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1.
2. நான் துறையூர் காவல் நிலைய ஆய்வாளருக்கு பதிவு தபால் மூலும் அனுப்பிய புகார் மனு ம.சா.ஆ.2.
3. துறையூர் காவல் நிலைய ஆய்வாளர் புகாரை பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.3.
4. திருச்சி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிய புகார் மனு ம.சா.ஆ.4.
5. துறையூர் காவல் துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகாரை பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.5.

08.06.2026

6. சடலக்கூராய்வு அறிக்கை ம.சா.ஆ.6. ( **ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.** )

7. வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.7.

8. எனது கணவரின் சம்பள சான்றிதழ் ம.சா.ஆ.8 ( **ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**.)

**<u>கு.வி (எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்க்கவில்லை. முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ள விவரங்களை பொறுத்து தான் உயர் அதிகாரிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான் . அந்த அறிவிப்பில் என்ன சொல்லியுள்ளேன் என்று எனக்கு தெரியவில்லை. தமிழ் படிப்பேன். ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் கண்டெக்டர் என் கணவர் மது போதையில் இருந்ததாக தெரிகிறது என்றும் போன் பேசி கொண்டே பின்படிக்கட்டில் தவறி கீழே விழுந்தார் என்று புகார் கொடுத்திருக்கிறார் என்றால் தவறாக புகார் கொடுத்திருக்கிறார்.

நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் என்னை அழைத்து போலிசார் விசாரிக்கவில்லை. என் கணவர் மீது தவறில்லை என்று தனியாக நீதிமன்றத்தில் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவே இல்லை. ம.சா.ஆ.1 ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்கு எந்த நிலையில் இருக்கிறது என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. என் கணவரின் மீது தான் தவறு என்பதால் தான் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

என் கணவர் வேலை பார்த்ததாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை பொறுத்து அந்த நிறுவனத்தை அழைத்து விசாரித்தால் தான் தெரிய வரும் என்றால்

08.06.2026

விசாரிக்கலாம். என் கணவர் சம்பளம் வங்கி கணக்கில் செலுத்தப்படுமா என்றால் கையில் தான் கொடுப்பார்கள். நான் தற்சமயம் வீட்டு வேலை செய்து வருகிறேன். என் கணவர் தான் மது போதையில் பேருந்தில் பயணம் செய்த போது படிக்கட்டிலிருந்து போன் பேசி கொண்டு தவறி கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றும் 1 ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. என் கணவரின் வயதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவரின் இறப்பால் எனக்கு வருமான இழப்பு ஏற்படவில்லை என்றும் நான் வேலை பார்த்து சம்பாதிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றும் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சாட்சியம் அளித்ததை தட்டெழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு, அவரது கையொப்பம் பெறப்பட்டது.

KARTHIKA Digitally signed by KARTHIKA Date: 2026.06.08 16:08:22 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.II,
திருச்சிராப்பள்ளி.